**நகராட்சி அலுவலகம், நரசிங்கபுரம்**
**நாள் :**

**<u>கூட்டப் பொருள்</u>**

நரசிங்கபுரம் நகராட்சி மன்ற கூட்டம் தனி அலுவலர் அவர்களால் 08–03–2019ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு இந்நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தின் மன்றப்பொருள்.

பொருள் : 1

நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிடம் கட்ட அனுமதி கோரி வரும் கட்டிட விண்ணப்பங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சி கட்டிட விதிகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு, தற்போது தமிழக அரசால் அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம் ஏ1), நாள்.04.02.2019ன்படி இறுதி செய்யப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி III, பிரிவு 1 (a), நாள்.04.02.2019–ல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள “தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019”–ன்படி உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்படும் நடைமுறைகளை கடைபிடிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 05.03.2019ந் தேதியிட்ட சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.31159/2019/டிபி3–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இனி வருங்காலங்களில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, பிரிவு 14–ன்படி திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் அனுமதிக்காலத்தினை 5 ஆண்டுகளுக்கு வழங்கவும், ஒருமுறை கால நீடிப்பு காலத்தினை 3 ஆண்டுகளுக்கு வழங்கவும், புதிய கால அவகாசத்திற்கேற்ப உரிமையாணை கட்டணங்களின் விகிதத்தினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் கண்டவாறு திருத்திய கட்டண விகிதங்களின்படி வரும் 01.04.2019 முதல் வசூலிக்கவும், மேற்படி திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டண விவரத்தினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஏற்படும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** :

1) திட்ட அனுமதி (ம) கட்டிட அனுமதிக்காலம் 5ஆண்டுகளுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் 01.04.2019 முதல் திருத்தியமைக்கப்பட்ட புதிய உரிமையாணை கட்டணங்களின்படி கட்டணங்கள் வசூலிக்கும் பொருட்டு திருத்தியமைக்கப்பட்ட புதிய உரிமையாணை கட்டணங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) புதியதாக திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டண விவரங்களை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 2

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட உரிமையாணைக் கட்டணம், மனைப்பிரிவு ஒப்புதல், வரை கடப்புகள், பட வரைவாளர்கள் உரிமம், பராமத்து பணிகள் இயந்திர நிறுவன உரிமைக் கட்டணம் மற்றும் இதர இனங்களுக்கு 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டபிரிவுகள் 104, 105, 143, 173, 176, 181, 183, 186, 187, 197, 200, 201, 205, 208, 209, 210, 215, 245, 249, 250, 255, 258, 262, 262–எ, 269, 270, 281, 258, 300, 321(2), 328, 351, 353 ஷெட்யூல்–IIIன் விதி IIன் ஷெட்யூல் IV ன் விதி 33 ஆகியவைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்புக்குட்பட்டு உரிமங்களுக்கான காரியங்கள், தொழில்கள் ஆகியவற்றுக்கான உரிமையாணை கட்டணம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கட்டணம் எந்த உபயோகத்திற்கு என்பது | 1920ம் வருடத்திய மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் பிரிவு | அலகு | காலம் | புதியதாக நிர்ணயம் செய்ய உள்ள கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு தெரு மற்றும் ஒப்புதல் | | | | |
| அ) | மனைப்பிரிவு மற்றும் தெரு அமைத்தலுக்கான அனுமதி | 175, 176 | ஒவ்வொரு 1000 சதுர மீட்டர் பரப்பு அல்லது அதன் பாகம் | ஒரு முறை மட்டும் | 3000/– |
| ஆ) | தெரு மட்டும் அமைத்தலுக்கான அனுமதி | 176 | ஒவ்வொரு 100 மீட்டர் நீளம் அல்லது அதன் பாகம் | “ | 1000/– |
| இ) | கட்டிட உரிமம் பெறவதற்கு முன்பாக மனை ஒப்புதல் | | | | – |
| | i) குடியிருப்பு மற்றும் விவசாய உபயோகம் | 197, 200 | ஒவ்வொரு 100 சதுர மீட்டர் பரப்பு அல்லது அதன் பாகம் | “ | 400/– |
| | ii) வணிக மற்றும் தொழில் உபயோகம் | 197, 200 | “ | “ | 500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | iii) இதர உபயோகம் | 197, 200 | “ | “ | 350/– |
| 2 | கட்டிட உரிமம் உபயோகம் | | | | |
| அ) | குடியிருப்பு மற்றும் விவசாய உபயோகம் | 197, 201 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர் பரப்பு அல்லது அதன் பாகத்திற்கு | ஐந்தாண்டு களுக்கு | 250/– |
| ஆ) | வியாபார உபயோகம் மற்றும் தொழிலகம் உபயோகம் | 197, 201 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர் பரப்பு அல்லது அதன் பாகத்திற்கு | ஐந்தாண்டு களுக்கு | 400/– |
| இ) | இதர உபயோகம் | 197, 201 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர் பரப்பு அல்லது அதன் பாகத்திற்கு | ஐந்தாண்டு களுக்கு | 300– |
| ஈ) | சுற்றுச்சுவர் கட்டுதல் | 197, 201 | ஒவ்வொரு 10 மீட்டர் நீளத்திற்கு | ஐந்தாண்டு களுக்கு | 200/– |
| | 1. நச்சுத்தடை தொட்டி (Spetic Tank) உறிஞ்சு குழி (Soak Pit) ஊறுகுழி மற்றும் கிணறு அமைத்தல் | 197 | ஒரு இனத்திற்கு | ஒரு முறை மட்டும் | 500/– |
| | 2. தனியாக மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் கட்டுதல் | 197 | ஒன்றுக்கு | ஒரு முறை மட்டும் | 500/– |
| | 3. தனிப்பட்டு கட்டப்படும் குளியலறை மற்றும் கழிப்பிடம் | 197 | 10 சதுர மீட்டர் அதன் பாகம் | ஓராண்டிற்கு | 500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | குடிசை மற்றும் கொட்டகை கட்டுவதற்கான அனுமதி | 208, 210 | ஒவ்வொரு 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகம் | ஐந்தாண்டு களுக்கு | 200/– |
| 4 | மராமத்துப் பணி | | | | |
| அ) | உறுதிப்படுத்தப்பட்ட காரைத்தளம் (RCC Roof) அல்லது மதராஸ் காரைத்தளம் (Madres Terraced Buildings) | 215 | ஒரு இனத்திற்கு | ஓராண்டிற்கு | 1500/– |
| ஆ) | ஓட்டுவில்லை மற்றும் கல்நார் சிமெண்ட் அட்டை மற்றும் தகரம் வேய்ந்த கூரைக்கட்டிடம் | 215 | ஒரு இனத்திற்கு | ஓராண்டிற்கு | 1000/– |
| இ) | குடிசை வீடு (ஓலை மற்றும் புல்லினால் வேயப்பட்ட கூரை வீடு) | 215 | ஒரு இனத்திற்கு | ஓராண்டிற்கு | 500/– |
| 5 | வரை கடப்புகள் | | | | |
| அ) | i) தெருவடிகால், தாங்குசுவர் உள்ளடக்கி தனிப்பட்ட வளாகத்திற்கு செல்ல ஏதுவாக அத்தியாவசியப்படி வடிகால் மூடி மற்றும் சிறுபாலம் அமைத்தல். 1 மீட்டர் அகலத்திற்கு இலவசம் 1 மீட்டருக்கு அதிகமாக உள்ள ஒவ்வொரு சதுர மீட்டருக்கும். | 143, 183(1) | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு ஆண்டு | 250/– |
| | ii) முதல் தளத்தில் பிதுக்கல் (முகப்பு மாடம் | 183(1) | ஒரு சதுர மீட்டர் | ஒரு ஆண்டு | 250/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெய்யல் மறைவு போன்றவை) | | அல்லது அதன் பாகத்திற்கு | | |
| ஆ) | பொது தெரு மற்றும் பொது இடங்களில் பங்க் கடை, பந்தல் மற்றும் கொட்டகை முதலியவை அமைக்க தற்காலிக அனுமதி வழங்கல் | 183(2) | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு ஆண்டு | 250/– |
| | 1. வணிகம், கேளிக்கை மற்றும் திருமணம் | 183(2) | 1 சதுர மீட்டர் | ஒரு மாதம் அதற்கு குறைவான காலத்தில் | 100/– |
| | 2. கோடை பந்தல் | 182(2) | 10 சதுர மீட்டர் அல்லத அதன் பாகம் | மார்ச் முதல் ஜூன் வரையில் | 250/– |
| | 3. திருவிழா மற்றும் இறப்பு சம்மந்தமான காரியங்களுக்கான பந்தல் | 182(2) | – | – | – |
| | 4. விளம்பர தட்டிகள் மற்றும் நகராட்சி சுவற்றில் விளம்பரம் எழுதுதல் | 187 | 1 சதுர மீட்டர் அல்லது அதன் பாகம் | ஒரு நிதியாண்டு அல்லது அதன் பாகம் | – |
| 6 | காம்பவுண்டடிங் பீஸ் (Compounding fees) | | | | |
| | அ) நகரமைப்பு பிரிவில் தொடரப்பட்ட வழக்குகளை திரும்ப பெற | 351 | ஒரு முறை | ஒரு நிதியாண்டு அல்லது அதன் பாகம் | 2000/– |
| 7 | அனுமதியை புதுப்பிக்க (Renewal of license) | 204 | ஒரு முறை | ஒரு வருடம் | 2000/– |
| 8 | அனுமதியில்லாமல் கட்டப்படும் இயந்திர நிறுவன கட்டிடங்கள் | 197, 200, 201, 207, 208, 215, 217 | ஒரு முறை | | 2000/– |
| 9 | வரை கடப்புகளை நகராட்சியின் அலுவலர்கள் அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களை மீண்டும் திருப்பி கொடுக்க | 351 | ஒரு முறை | – | 500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல் ஒன்றிற்கு | 215 | ஒரு முறை | – | 250/– |
| 11 | நகரமைப்பு விரிவு அபிவிருத்தி திட்டம் வரைபட நகல் ஒன்றிற்கு | 215 | ஒரு முறை | – | 500/– |
| 12 | உரிமம் பெற்றகட்டி அளவர் நியமனம் | | | | |
| | அ) உரிமக் கட்டணம் | – | – | ஒரு நிதியாண்டு | 1000/– |
| | ஆ) பொறுப்புத் தொகை | – | – | ஒரு நிதியாண்டு | 5000/– |
| 13 | சிறுதொழில் காரியங்களுக்காக ஆயில் இஞ்சின் நீராவி அல்லது மின்சாரம் மூலம் இயந்திரங்களை உபயோகப்படுத்துவது மின்சார விசையினால் இயக்கப்படுபவை அல்லது மின்சார விசையினாலன்றி மற்ற வகையில் ஓட்டப்படும் இயந்திரங்கள். | | | | |
| 1 | மின்சார விசையினால் ஓடப்படும் இயந்திரங்கள் | | | | |
| | 1) 1 கு.ச.வே முதல் 5 கு.ச.வே மேற்படாதது | 250 | ஒரு நிதியாண்டு | – | 500/– |
| | 2) 5கு.ச.வே முதல் 10 கு.ச.வே மேற்படாதது | 250 | ஒரு நிதியாண்டு | | 1000/– |
| | 3) 20 கு.ச.வே முதல் 50 கு.ச.வே மேற்படாதது | 250 | ஒரு நிதியாண்டு | | 2000/– |
| | 4) 50 கு.ச.வே முதல் 100 கு.ச.வே மேற்படாதது | 250 | ஒரு நிதியாண்டு | | 4000/– |
| | 5) 100 கு.ச.வே முதல் 200 கு.ச.வே மேற்படாதது | 250 | ஒரு நிதியாண்டு | | 6000/– |
| | 6) 200 கு.ச.வேகத்திற்கு மேல் ஒவ்வொரு குதிரை சக்தி சேகத்திற்கும் ரூ.100 | 250 | ஒரு நிதியாண்டு | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெல்டிங் மற்றும் கியாஸ் இன்ஜின் | 250 | ஒரு நிதியாண்டு | | 1000/— |
| 2 | எந்த ஒரு தொழில் அல்லது தயாரிப்புகளுக்கு தேவையான இயந்திரம் நிறுவ அனுமதி வழங்க கட்டணம் ஒவ்வொன்றிற்கும் | | | | |
| | 1) நெல் அறைக்கும் இயந்திரம் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 2) மாவு அறைக்கும் இயந்திரம் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 3) பிண்டோ செக்கு அல்லது ரோட்டரி | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 4) கடலை உடைக்கும் இயந்திரம் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 5) டிசைன்டி கேடர் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 6) ஐஸ் தயாரிப்பு அல்லது குளிர் சாதனப் பெட்டி | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 7) மரம் அறுக்கும் இயந்திரம் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 1000/— |
| | 8) கிழங்கு அரைப்பு அல்லது உரிப்பு | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 1200/— |
| | 9) பாலிஷர் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 10) கரும்பு பிழியும் இயந்திரம் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 11) லேத் பிளாண்ட் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 12) அச்சடிக்கும் இயந்திரம் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 13) சாணை இயந்திரம் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 14) வெல்டிங் இயந்திரம் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 15) ஆயில் எக்ஸ்பெல்லர் | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |
| | 16) கைத்தொழில் காரியங்களுக்கு தேவையான விசை சக்தியால் இயக்கப்படும் வேறு எந்த ஒரு | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/— |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இயந்திரத்திற்கும் | | | | |
| 3 | 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 250ன் கீழும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் கீழும் யாதொரு இடத்தில் யாதொரு கைத் தொழில் காரியங்களுக்கு ஸ்தாபிக்கப்படும் மின்சார இயந்திரங்கள் மின்சார விசையினாலன்றி மற்ற வகையினால் ஓட்டப்படும் இயந்திரங்களுக்கு மேற்படி சட்டம் 249ம் பிரிவு அயிட்டம் 3ல் 1 முதல் 112 வரை மட்டும் இயந்திரங்களுக்கு ஆண்டுக்கான உரிமம் கொடுப்பதற்கும் அல்லது புதுப்பிப்பதற்கும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணமே ஆகும். | 249 | ஒன்று | ஒரு நிதியாண்டிற்கு | 500/– |
| 14 | பொதுவாக தொழிற்சாலை முறையில் எந்த வஸ்துவாவது தயார் செய்வதன் காரணமாக மனித வாழ்க்கைக்கு அபாயமும், சுகாதாரத்திற்கு பங்கமும் அல்லது சொத்துக்களுக்கு சேதமும் உண்டாக்கக்கூடிய தொழில் இடங்களுக்கு. | 250 | – | ஒரு நிதியாண்டிற்கு | 1000/– |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 3

இந்நகராட்சி **பொது நிதி 2019-20-**ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு **25.06.2019**ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **அதிகம் / குறைவு** |
|---|---|---|---|---|
| 1 | 6 எண்ணிக்கையில் பேட்டரியினால் இயங்கும் வண்டி (BOV) கொள்முதல் செய்யும் பணி | 10.80 | அருண் இன்டியன் மோட்டார்ஸ் | -0.06% குறைவு |
| | | | பிரியம் இன்டர்ஸ்ரிஸ் அன்ட் இன்ஜினியரிங் பி.லிமிடெட் | 0.16% அதிகம் |
| 2 | 2 எண்ணிக்கையில் இளரக வணிக வாகனம் (LCV) கொள்முதல் செய்யும் பணி. | 11.20 | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | -3.06% குறைவு |
| | | | ஏ.பி.டி இன்டர்ஸ்ரிஸ் | -0.01% குறைவு |
| | | | கிரிஸ்டல் மோட்டார்ஸ் | -3.08% குறைவு |
| | | | ஜே.வி.கே. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | -0.38% குறைவு |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட வரிசை எண்.1 பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.அருண் இன்டியன் மோட்டார்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட வரிசை எண்.2 பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்ட பணிகளுக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 4

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 29 DBC பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி DBC பணியாளர்களின் ஒப்பந்த காலம் 31.03.2019-வுடன் முடிவடைவதால் மேலும் ஒப்பந்த காலத்தை 01.04.2019 முதல் 30.06.2019 வரை நீடித்து கொள்ள ஒரு நாளைக்கு DBC 29x319 = ரூ.9251/-, 30x9251 = ரூ.277530/- x 3 = ரூ.832590/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 5

இந்நகராட்சி **பொது நிதி 2019-20**ல் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருப்பதற்கு DBC பணியாளர் டெங்கு காய்ச்சல் ஒழிக்கும் பணிக்கு 05.03.2019ம் தேதி அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | வேலையின் விபரம் | எண்ணிக்கை | செம்பருத்தீ பூ சுபமதி குழு | ஓம்சக்தி மகளிர் சுய உதவிக்குழு | தூய்மை மகளிர் குழு |
|---|---|---|---|---|---|
| 1 | டெங்கு கொசுப்புழு தடுக்கும் பணி (ஒரு நபருக்கு) | 1 நாள் | ரூ.319.00 | ரூ.369.00 | ரூ.387.00 |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **செம்பருத்தீ பூ சுபமதி குழுவின்** விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 6**

நரசிங்கபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான படிவங்கள், பாரங்கள் மற்றும் வெள்ளைத்தாள்கள் 2019–20ஆம் ஆண்டிற்கு எழுதுப்பொருட்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது..

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 7

இந்நகராட்சி **பொது நிதி 2018-19**-ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு 08.03.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3,4,5,7 மற்றும் 9 ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு மற்றும் பி.வி.சி டேங் அமைக்கும் பணி. | 2.00 | எம்.ஆறுமுகம் | -0.29 % குறைவு |
| | | | கே.வரதராஜன் | 0.50 % அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.எம்.ஆறுமுகம்** ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளுக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.